# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ)

******

முறையீட்டு மனு எண். 761/மா/2017

ஆணை எண். 148/2017

நாள் : 15/06/2017

| | | |
|---|---|---|
| 28.07.2016 நாளிட்ட<br>தினமலர் நாளிதழ் செய்தி | - | முறையீட்டு மனுவாகப்<br>பதிவு செய்யப்பட்டது. |
| மண்டல அலுவலர்,<br>மண்டலம் – 1,<br>சென்னை மாநகராட்சி. | - | எதிர்மனுதாரர் |

சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலம், எண்ணூர், நேரு நகரில் உள்ள பூங்கா குறித்து "கவனிப்பாரின்றி பாழடைந்தது அரை நூற்றாண்டு கண்ட பூங்கா" என்று தலைப்பிட்டு 28.07.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7 ன்கீழ் முறையீடாக எடுத்துக்கொள்ளப்பட்டு, 761/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி செய்தி குறித்து மண்டல அலுவலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலம், எண்ணூர், நேரு நகரில் உள்ள பூங்கா குறித்து "கவனிப்பாரின்றி பாழடைந்தது அரை நூற்றாண்டு கண்ட பூங்கா" என்று தலைப்பிட்டு 28.07.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்படி செய்தி குறித்து, திருவொற்றியூர் மண்டல அலுவலர் 12.06.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வருகை தந்து பூங்கா குறித்த விளக்கத்தினை எழுத்து பூர்வமாக அளித்தார். எண்ணூர், நேரு நகரில் உள்ள மேற்குறிப்பிட்ட பூங்கா 1141.61 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது என்றும் அப்பூங்காவில் சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி ஒன்றும், இரண்டு கிணறுகளும், கட்டுத் தொட்டி (Sump) ஒன்றும் அமைந்துள்ளன என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் கத்திவாக்கம் ஊராட்சியால் கட்டிக்கொடுக்கப்பட்ட இளைஞர் நற்பணி

மன்றக்கட்டிடம் ஒன்றும் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டிடப் பகுதி மற்றும் நீர்தேக்கத் தொட்டிகள் அமைந்துள்ள பகுதியினைத் தவிர்த்து மீதமுள்ள இடங்களில் மரங்கள் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். பூங்காவில் உள்ள மரங்களை நல்லமுறையில் பேணிக்காக்க உரிய நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும் எனவும் உறுதி அளித்துள்ளார்.

2. இந்நேர்வு சம்பந்தமாக அறிக்கை கோரப்பட்டு ஓராண்டு முடிந்த நிலையிலேயே மண்டல அலுவலர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மாநகராட்சியின் சேவை குறைபாடுகள் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து நாளிதழ்களில் செய்திகள் அவ்வப்போது வெளியாகின்றன. எனவே, நாளிதழ்களின் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்து உண்மைத் தன்மையுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாநகராட்சி காலம் தாழ்த்தாது மேற்கொள்ளவேண்டும். இந்நேர்வில், திருவொற்றியூர் மண்டல அலுவலர் காலம் தாழ்த்தி அறிக்கை சமர்ப்பித்ததை எதிர் காலத்தில் தவிர்த்திட இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

2017– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 15–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – I,
சென்னை மாநகராட்சி,
எண்.947, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை – 19.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்